உ

*ஓம் ஸ்ரீ மாத்ரே நம:*

# ஹிந்து சங்கரர் ஸ்ரீ காமாக்ஷிஅம்பாள் ஆலயத்தால் நிறுவப்படும் கலாச்சார மண்டபம், திருமண மண்டபம், அன்னதான மண்டபம், நூல்நிலையம், கண்காட்சிநிலையம் போன்றன அமைப்பதற்குரிய புதிய நிலத்தை வாங்குவதற்கான நிதி சேர்த்தல்.

## அன்பார்ந்த ஆஸ்தீகப் பக்தப் பெருமக்களே!

ஜேர்மனியிலும், இலங்கையிலும், இந்தியாவிலும் மேற்படி 1994ம் ஆண்டு முதல் பல திருப்பணிகளையும், உதவிகளையும் செய்து வரும் ஆலயம் தற்பொழுது மேற்கண்டவாறு ஒரு பெரிய திருப்பணியை ஆரம்பித்துள்ளது. மேல் விபரப்படி இதற்கென 20,000 சதுர மீற்றர் நிலத்தை ஹம் நகர சபையிடம் வாங்கியுள்ளோம். இக்காணியின் மொத்த விலை 9 லட்சம் யூரோவாகும் மேலும் இக்காணிக்கான பணத்தை பக்தர்களின் கணிசமான நிதியுதவியும் வங்கியின் பெரும் கடனுதவியுடனும் ஹம் நகரசபைக்கு பணத்தைச் செலுத்தியுள்ளோம். ஆனால் வங்கிக்கு சுமார் 5 லட்சம் யூரோ 2010 ஆண்டு இறுதிக்குள் செலுத்தியாக வேண்டும். ஆகவே அன்பர்களே! பல ஆண்டுகளுக்கு முன்பு கோவிலுக்குரிய காணியை தங்களுடைய பெயர்களில் வாங்கித்தந்து உதவி செய்ததுபோல் இத்திருப்பணிக்குரிய காணியையும் ஒவ்வொருவரும் ஒரு சதுர மீட்டரோ அல்லது அதற்கு மேற்பட்டதோ வாங்கித் தருமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். மேற்படி ஒரு சதுர மீட்டரின் விலை 150 யூரோ மட்டுமே. முக்கியமாக 31.12.2010க்குள் உதவிசெய்யுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். தலைசிறந்த தானங்களில் பூமி தானம் மிக உயர்ந்தது. அதனால் தான் எம்பெருமான் ஸ்ரீமத் நாராயணன் மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்ணைத் தானமாகப் பெற்று, மகாபலிக்கு முத்தியையும் கொடுத்து புது யுகத்தில் தெய்வேந்திரப் பதவியையும் தந்து, அவனுக்கு துணையாகவும் இருப்பேன் என்று கூறியதாக ஸ்ரீமத் பாகவத புராணம் கூறுகின்றது. ஆகவே அன்பர்களே! நீங்களும் வாழும் காலத்தில் பூமிதானம், ஸ்வர்ணதானம், கோதானம், அன்னதானம் போன்றவற்றைச் செய்து அழியாத முத்தியின்பத்தை அடைவீர்களாக! குருவாகிய எமது தர்மம் அனைவருக்கும் நல்வழிகளைக் கூறுவதும், காட்டுவதுமாகும். அப்படி நடந்து கொள்வது தங்களுடைய கடமையாகும்.

நாம் நிறைவேற்ற இருக்கும் இத்திருப்பணினால் தமிழன் எங்கு எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்தாலும் தனது கலை, கலாச்சாரம், பக்தி, வழிபாடு போன்றவற்றை கைவிடாமல் பாதுகாத்துக் கொள்கிறான், கொள்வான் என்கின்ற எடுத்துக் காட்டும் இங்கு பிறந்து வாழும் சிறார்களும் எங்களுடைய மூதாதையர்கள் எப்படி வாழ்ந்திருக்கிறார்கள் என்ற அடிச்சுவடியை பின்பற்றுவதற்கும் வழிகாட்டியாக இருக்கும். அன்பர்களே! ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தின் வளர்ச்சியும் செய்துவரும் திருப்பணிகள் பற்றியும் எல்லோரும் நன்கு புரிந்து கொண்டவர்கள். ஆகவே உங்களுக்கு நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை. எனவே இத்திருப்பணியில் அனைத்துப் பக்தர்களையும் பங்கெடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

*இவ்வண்ணம்*
*ஆலய ஆதீனகர்தா*


**Bankverbindung**
Sparkasse Hamm
Konto: 24 20 54 45
BLZ: 410 500 95
IBAN:
DE22410500950024205445
SWIFT-BIC WELADEDIHAM

**Gesprächsstunden**
Täglich 14:00 - 16:00 Uhr u.
20:00 - 21:00 Uhr
**Gesprächspartner:**
Siva Sri Arumuga Paskarakurukkal